தலைப்பு 219 - விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 219 – விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2025 ஜுன் 26 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2025 ஜுன் 25 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமை, நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க பொருண்மையானவை தொடர்ப்பிலும் நியாமான நிலைமையை பிரதிபளிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கை 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த வியடங்களில் இருந்துதான தாக்கத்தை தவிரத்து எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்கை தயாரிக்கும் அடிப்படை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 01 தொடர்பில் கவணம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்ப பிரமாணம் 150, 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் விளையாட்டுத்துறை அபிவிருத்த் திணைக்களத்தின் பொது திறைசேரியினதும், பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால் இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை விளையாட்டுத்துறை அபிவிருத்தித்

திணைக்களத்தினதும், பொது திறைசேரியினதும், பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மட்டும் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்ட இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும், உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன்

காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவு ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடகத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள், சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமானதாகவும் உள்ளடக்கப்பட்டதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலை மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு மீதான இணக்கக்கூற்று

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	முற்பண பீ கணக்கில் காட்டப்பட்டுள்ள பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் கூட்டுத்தொகையிடையே திறைசேரி கணினி அச்சுப் பிரதி இணக்கக்கூற்றில் காட்டப்பட்டுள்ள அரச உத்தியோகத்தர்களின் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் இடையே ரூபா 166,800 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.	எதிர் காலத்தில் குறைபாடுகள் ஏற்படாத வகையில் செயற்படுவது என அறிவிக்கின்றேன்.	சரியாக கணக்குகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ள ஏசீஏ-05 படிவத்தில் 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு	இந்த சீராக்கல் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு முடியாமல் போனது என	சரியாக கணக்குகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	திறைசேரி ஏடுகளின் படி அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு மீதி ரூபா 37,919,916 தொகை என உட்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், திறைச்சேரி SA 52 படிவத்தின் படி அத் திகதியில் உள்ளவாறு நேரொத்த மீதி ரூபா 37,882,016 தொகை என காட்டப்பட்டிருந்தது. அதன்படி, திணைக்கள ஏடுகளில் காட்டப்பட்டுள்ள இறுதி மீதி மற்றும் திறைசேரி SA 52 படிவத்தினிடையே ரூபா 37,900 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.	கருணையுடன் அறிவிப்பதுடன், முற்பண பீ கணக்கு தொடர்பாக காட்டப்பட்டுள்ள மீதி சரியானதென அறிவிக்கின்றேன்.	
(iii)	முற்பண ''பீ'' கணக்கின் படி நிலுவையாக காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 706,855 ஆக காணப்பட்டது. அவற்றில் சேவையை விட்டுச் சென்றுள்ள நான்கு உத்தியோகத்தர்களின் 01 – 03 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 222,435 இற்கான கடன்மீதி இதுவரை உரிய முறையில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இந்த கடன்மீதியை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றதென அறிவிக்கின்றேன்.	நிலுவை கடன்மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ) ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கீடு செய்வதில் பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி மொத்த நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 4,011.78 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 3,519.49 மில்லியன் எனப்படும் அதாவது 88 சதவீதம் நடைமுறை வேலை என இனங்காணப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் அந்த நடைமுறை வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருநத பூர்த்தி செய்யப்பட்டிருந்த செயற்திட்டங்களின் பெறுமதியை	ஏனைய அரச நிறுவனங்களுக்கு மற்றும் பாடசாலைகளுக்க ஒப்படைத்திருக்க வேண்டிய நிர்மாண வேலைகளின் பெறுமதியை எதிர் காலத்தில் அந்த நிறுவனங்களுக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள செயற்திட்டங்களை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு உரித்தாக்கப்பட்டிருந்த செயற்திட்டங்கள் தொடர்பாக சீராக்கல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. நடைமுறை வேலை மீதியினுள் திணைக்களத்தினால் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட ஏனைய அரசாங்க நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த ரூபா 682.62 மில்லியன் தொகை பெறுமதியான 10 செயற்திட்டங்களும் அடங்கியிருந்ததுடன், அந்தச் செயற்திட்டங்களை இனங்கண்டு அந்த நிறுவனங்களுக்கு முறைப் பிரகாரம் உரத்தாக்கி கணக்குகளில் உட்படுத்திய பின்னர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		
(ii)	விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களத்தினால் பல வருடங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டிருந்த டொரின்டன் ஹொக்கி விளையாட்டுத் திடல் மற்றும் மாத்தளை ஹொக்கி விளையாட்டுத் திடல் சொத்துக்கள் என கணக்கீடு செய்திருக்காத போதிலும், இந்த விளையாட்டுத் திடலின் அபிவிருத்திக்காக 2024 ஆண்டின் போது முறையே ரூபா 154.19 மில்லியன் தொகை மற்றும் ரூபா 165.7 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.	இந்த ஹொக்கி விளையாட்டுத் திடல்கள் பல வருடங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், இதுவரை இந்த விளையாட்டுத் திடல்கள் திணைக்களத்திற்கு உரித்தாக்கியிருக்கவில்லை.	நிதியல்லாத சொத்துக்களை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(இ) முற்பணக் கணக்கு மீதிகள்

முற்பணக் கணக்குகளில் வருட இறுதியில் உள்ளவாறு மீதிகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
கல்முனை விளையாட்டு வளாகத்தில் உள்ள உள்ளக விளையாட்டரங்கு செயற்திட்டத்திற்காக 2020 ஆண்டில் வழங்கப்பட்டிருந்த முற்பணத் தொகையில் ரூபா 5.68 மில்லியனிற்கான மீதியொன்று 2024 ஆண்டு இறுதியளவிலும் திணைக்களத்தினால் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது இந்த சீராக்கல்கள் மேற்கொள்வதற்கு இயலாமல் போனது எனவும் அறிவிக்கப்படுவதுடன், அதனை 2025 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன்.	முற்பணத் தொகை தீர்த்தல் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் உரிய சீராக்கல்கள் மேற்கொள்ள வேண்டும்.

(ஈ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்காய்விற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	விளையாட்டுச் சக்தி தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விளையாட்டு வீரர்களுக்கான போசாக்கு கொடுப்பனவு என 03 தேசிய விளையாட்டுச் சங்கங்கள் அல்லது சம்மேளனங்களின் மற்றும் மேன்முறையீட்டுக் குழுவின் பரிந்துரை உட்பட 193 விளையாட்டு வீரர்கள் ரூபா 3,670,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், விளையாட்டு வீரர்கள் அந்தத தொகை பெற்றுக்கொண்டதற்காக கையொப்பம் அல்லது உரிய கணக்குகளுக்கு வங்கியில் வைப்புச் செய்தல்களை உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பித்திருக்கவில்லை.	கருத்துத் தெரிவிக்கப்படவில்லை.	குறிப்பிட்ட விளையாட்டு வீரர்களுக்கு பணம் அனுப்பபட்டது என சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(ii)	2024 ஆண்டில் நடாத்தப்பட்ட இந்து இலங்கை தொடுப்புப் படகுப் போட்டிக்காக விளையாட்டு வீரர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு தேவையான தங்குமிட வசதிகள் உடல் ஆரோக்கிய சேவைகள், உணவுப் பானங்கள், போட்டியாளர்களுக்கு சான்றிதழ்கள், பதக்கங்கள், கிண்ணங்கள் என்பன அடங்கிய தேவைகள் பெறுகைக்காக ரூபா 3,924,587 இற்கான தொகையொன்று செலவிட்டிருந்த போதிலும், குறிப்பிட்ட பில்பத்திரங்கள் அல்லது இன்வொயிஸ்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், போட்டிகளுக்காக வழங்கப்படுகின்ற உணவு வகைகள் கடற்படையினால் பெற்றுக்கொள்வதற்கான செலவு ரூபா 1,598,887 தொகையாக காணப்பட்டதுடன், அந்த வசதிகளை பெற்றுக்கொண்ட விளையாட்டு வீரர்களின், உத்தியோகத்தர்களின் மற்றும் பயிற்சி வழங்குனர்களின் விபரங்கள் அடங்கிய பெயர் பட்டியலொன்று அல்லது பங்குபற்றியதை உறுதிப்படுத்துவதற்குரிய ஆவணங்கள் ஏதும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	கருத்துத் தெரிவிக்கப்படவில்லை.	உறுதிப்படுத்தலுக்குரிய ஆவணங்கள் கண்க்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

முன்னைய ஆண்டிற்குரிய அறிக்கையின் பந்தியுடன் தொடர்பு	செயற்படுத்தப்பட்டிருக்காத பரிந்துரைகள்	இந்த அறிக்கையில் பந்தியுடன் தொடர்பு
1.6.3(ஆ)	நடைமுறை வேலை மீதியில் காணப்படுகின்ற தற்போது வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள சொத்துக்களை முறைப் பிரகாரம் கணக்கீடு செய்த பின்னர் குறிப்பிட்ட தரப்பினருக்கு உரித்தாக்கி நிதிக்கூற்றுக்களில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற பரிந்துரை.	1.6.1.1(அ)

3. நிதி மீளாய்வு

3.1 செலவு முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 50 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளை கடைபிடித்து முறையான எதிர்வுகூறலுடன் மற்றும் தர்க்க ரீதியான அடிப்படையொன்று இன்றி மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்த காரணத்தினால் 03 செலவு விடயங்களுக்காக வருடாந்த மதிப்பீட்டு மூலம் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 3,500,000 இற்கான ஏற்பாடுகள் எவ்வித பயன்பாடும் மேற்கொள்ளப்படாமல், முழுமையாக சேமிக்கப்பட்டிருந்ததுடன், மேலும் ஒரு செலவு	இந்த தேவைப்பாட்டை இனங்கண்டிருந்த போதிலும், முறையான செய்முறை ஒன்றின் மூலம் இந்த செயற்பாடினை மேற்கொள்வதற்கு போதியளவு பதவியணியொன்று திணைக்களத்தில் காணப்படாமையால் இந்த ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.	முறையான எதிர்வுகூறல் மற்றும் தர்க்கரீதியான அடிப்படையில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும்.

	விடயத்தில் (சுத்திகரிப்பு மற்றும் உடல் ஆரோக்கியம்) மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் அந்த ஏற்பாடுகளில் 80 சதவீதம் வேறு செலவு விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.		
(ஆ)	மீளாய்வண்டின் போது ரூபா 288.92 மில்லியன் தொகையொன்று தேசிய விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் சம்மேளனங்களுக்கு வழங்கப்பபட்டிருந்ததென கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், இலங்கை ஹொக்கி சம்மேளனம் மற்றும் இலங்கை ஸ்கொச் சம்மேளனம் உட்பட சம்மேளனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த பணம் அந்த சங்கங்களில் சரியாக பதிவு செய்யப்பட்டு இருக்காமை தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை மேற்கொண்டு உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது.	தேசிய விளையாட்டு சங்கங்கள் மற்றும் சம்மேளனத்திற்கு வழங்கப்பட்டிருந்த பணம் முறைப் பிரகாரம் அந்த விளையாட்டுச் சங்கங்கள் அல்லது சம்மேளனங்களின் கணக்குகளில் கணக்கீடு செய்யப்பட்டனவா என பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது என கருணையுடன் அறிவிக்கின்றேன்.	தேசிய விளையாட்டு சங்கங்கள் அல்லது சம்மேளங்களுக்கு வழங்கப்பட்டிருந்த பணம் கணக்கீடு செய்யப்படுகின்றதென பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

3.2 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அணுகுதல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி டொரின்டன் ஹொக்கி விளையாட்டுத் திடலின் ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டிய மீதித்தொகை ரூபா 4,496,780 தொகை மற்றும் மாத்தளை ஹொக்கி விளையாட்டுத் திடலின் ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டிய ரூபா 48,365,310 தொகை என்பன திணைக்களக் கணக்கேடுகளில் பொறுப்புக்கள் என இனங்கண்டிருக்கவில்லை.	இந்த ஒப்பந்த வேலையின் மேலதிக வேலை தொடர்பான மதிப்பீடொன்று திசெம்பர் 31 திகதி அளவில் கிடைத்திருக்காமையால் அந்தப் பொறுப்புக்கள் கணக்கீடு செய்ய முடியவில்லை.	செலுத்த வேண்டிய தொகைகள் நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளது.

	அவதானிப்புக்கள்			கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
	சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	பெறுமதி ரூபா	இணங்காமைகள்		
(அ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை				
	(i) நி.பி. 756(6)		பண்டக் கணிப்பீட்டு அறிக்கை தொடர்ந்து வரும் ஆண்டில் ஜூன் 15 திகதியன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2023 ஆண்டிற்குரிய பண்டக் கணிப்பீட்டு அலுவல்கள் பூர்த்தி செய்து கணிப்பீட்டு அறிக்கை 2025 ஏப்ரல் 01 திகதி அதாவது 09 மாத தாமத்தின் பின்னர் வழங்கப்பட்டிருந்ததுடன், 2024 பண்டக் கணிப்பீட்டு அறிக்கை இந்த அறிக்கைத் திகதி வரை சமர்ப்பித்திருக்கவில்லை.	2023 ஆண்டிற்கான பண்டக் கணிப்பீட்டு அறிக்கை 2025.04.01 திகதி அரச கணக்காய்வுப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டது.	அடுத்த வருடம் ஜூன் மாதம் 15 திகதிக்கு முன்னர் அறிக்கை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
	(ii) நி.பி. 104		குளியாப்பிட்டி சுபாரதி வித்தியாலயத்தின் விளையாட்டுத் திடல் அபிவிருத்தி செய்யும் போது ஏற்பட்டிருந்த நிதி மோசடி தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் விசாரணை ஒன்று மேற்கொள்வதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது டன், அதற்காக குழுவொன்று நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும், 2025 மே மாதம் வரை குறிப்பிட்ட குழுவின் அங்கத்தவர்களிடம்	அந்தக் குழுவின் அறிக்கையின் பரிந்துரையின் படி தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	குழுவின் அறிக்கையின் பரிந்துரையின் படி செயற்பட வேண்டும்.

			அறிக்கையொன்று பெற்றுக்கொண்டு அந்த அறிக்கை பரிந்துரையின் படி நடவடிக்கை எடுப்பதற்கு திணைக்களத்திற்கு முடியாமல் இருந்தது.		
(ஆ)	**தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை** 2024 ஜனவரி 01 திகதிய 01/2024 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பொது அறிவுரை தொடர் இலக்கம் 12.3	2,429,000	சுற்றறிக்கையின் பிரகாரம் நேய சந்திப்புக்கள், களிப்பு அலவலாவுதல் ஆகியவற்றிற்காக அரசாங்கப் பணம் பயன்படுத்தக்கூடாதிருந்த போதிலும், திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் போது அமைச்சரின் பங்குபற்றலுடன் நடைபெற்ற இலங்கை ரக்பி விளையாட்டு வீரர்களுக்கான களிப்பு அளவலாவலுக்காக கொழும்பு சினமன் கிரேண்ட் ஹோட்டலுக்கு செலுத்தப்பட்டிந்தது.	ரூபா 2,429,000 தொகை கொழும்பு சினமன் கிரேண்ட ஹோட்டலுக்கு செலுத்தியிருந்த பணம் வெற்றி பெற்ற ரக்பி விளையாட்டு வீரர்களுக்கு விருது வழங்குவதற்காக மற்றும் பிள்ளைகளை ஊக்குவிப்பதற்காகவே ஆகும்.	சுற்றறிக்கை அறிவுரைகளின் படி செயற்பட வேண்டும்.
(இ)	**அரச கணக்குச் சுற்றறிக்கை** 2024 திசெம்பர் 16 திகதிய 06/2024 இலக்கம் கொண்ட அரச கணக்கு வழிகாட்டலின் பந்தி 3.1		CIGAS டெக்ஸ்டொப் செயலி மூலம் எடுக்கப்படுகின்ற பரீட்சை மீதியின் மூலம் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளாமல் நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், திணைக்களத்தினால் பரீட்சை மீதி நிதிக்கூற்றுக்களுடன் உட்படுத்தியிருக்கவில்லை.	தவறுதலாக அதனை நிதிக்கூற்றுக்களுடன் உட்படுத்த முடியாமல் போனது.	சுற்றறிக்கை அறிவுரையின் படி செயற்பட வேண்டும்.
(ஈ)	2024 மே 03 திகதிய 2382/32 இலக்கம் கொண்ட இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிஷேட வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்டிருந்த 2024 இன் 01 ஆம் இலக்க விளையாட்டுச் சங்கக் கட்டளைகள்				
	(i) பகுதி I பிரிவு 08		ஏற்கனவே பதிவு	05 பேர்கள் அடங்கிய	அனைத்து

	செய்யப்பட்டுள்ள அனைத்து தேசிய விளையாட்டுச் சங்கங்கள் தொடர்பாக மதிப்பீடு / மதிப்பாய்வு மேற்கொண்டு வகைப்படுத்துவதற்காக 05 அங்கத்தவர்களை மிகைக்காத குழுவொன்று நியமனம் செய்யப்பட வேண்டிய போதிலும், அந்தக் குழு நியமனம் செய்யப்பட்டு வகைப்படுத்தல் மேற்கொள்வதற்கு இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன் , தற்போது அந்தக் குழு தேவையான அலுவல்கள் மேற்கொண்டு வருகின்றது.	தேசிய விளையாட்டுச் சங்கங்கள் தொடர்பாக மதிப்பீடு / மதிப்பாய்வு மேற்கொண்டு வகைப்படுத்தல் மேற்கொள்ள வேண்டும்.
(ii) பகுதி III இன் பிரிவு 06 (viii) மற்றும் (ix)	திறமையுடைய விளையாட்டு வீரர்களை இனங்காண்பதற்காக அனைத்து தேசிய விளையாட்டுச் சங்கங்கள் / சம்மேளங்களில் விளையாட்டு வீரர்களின் இயலுமை மற்றும் திறமையை முன்னேற்றுவதற்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் வழங்குதல் மற்றும் விளையாட்டு வீரர்கள் வாழ்க்கைத் தரவுகள், பங்குபற்றிய போட்டிச் சந்தர்ப்பங்கள், விளையாட்டுப் போட்டித் தொடரில் பிரதிநிதிப்படுத்திய குழு, அவர்களின் செயலாற்றுகை தொடர்பான தகவல்கள் மற்றும் தெரிவு செய்தல் தரப்படுத்துதல் மற்றும் வகைப்படுத்துதல் அடங்கிய முறையான தரவு முறைமையொன்று பேணிச் செல்ல வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு பேணிச் செல்வதற்காக திணைக்களத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	கணக்காய்வினால் சுட்டிக் காட்டிய அவதானிப்புக்கள் புதிய கட்டளைகளின் படி செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கின்றேன்.	திறமையுடைய விளையாட்டு வீரர்களை இனங்காணும் முறைமையை பேணிச் செல்ல வேண்டும்.

3.4 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்

(அ) போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம், இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் மற்றும் விளையாட்டு நிதியத்தின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியிருக்காத அரசியல் தோற்றமொன்றுடனான Sri Lanka Sports Fiesta 2024 என்ற பெயரில் நிகழ்ச்சித் திட்டமொன்று இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு, விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் மற்றும் Dialog நிறுவனத்துடன் இணைந்து ஒழுங்குபடுத்தி செயற்படுத்துவதற்காக ரூபா 40 மில்லியன் தொகையொன்று தேசிய விளையாட்டு நிதியத்திலிருந்து மற்றும் இலங்கை கிரிகட் நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்டு அந்தப் பணத்தில் ரூபா 39.06 மில்லியன் தெகை இந்த நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துவதற்காக செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.	Sri Lanka Sports Fiesta 2024 நிகழ்ச்சித் திட்டம் எதிர்பாராத நிகழ்ச்சித் திட்டமொன்றாக காணப்படுவதுடன், சுற்றுலா மற்றும் காணி மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் தலையீட்டுடன் சுற்றுலா மேம்பாட்டிற்காக செயற்படுத்தப்பட்டிருந்த நிகழ்ச்சித் திட்டமொன்றாக காணப்படுவதனால் விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களத்தின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் இந்த நிகழ்ச்சித் திட்டம் அடங்கியிருக்கவில்லை என அறிவிக்கின்றேன்.	திணைக்களத்தின் குறுக்கோள்களுக்குரிய நிகழ்ச்சித் திட்டங்கள் மாத்திரம் செயற்படுத்த வேண்டும்.
(i) மேற்கூறிய நிறுவனங்கள் இடையே உடன்படிக்கையொன்று அணுகியிருக்காததுடன், Dialog நிறுவனத்தின் மூலம் நிகழ்ச்சித் திட்டத்துக்காக வழங்கியிருந்த பங்களிப்பு மற்றும் நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்த 03 நாட்களில் நடாத்தப்பட்டிருந்த உணவு பான விற்பனை நிலையத்தின் மூலம் உழைக்கப்பட்ட வருமானம் ஏதும் அல்லது உபசரணைத் தொகையொன்று திணைக்களத்திற்கு கிடைத்திருக்கவில்லை.	இந்த நிகழ்ச்சித் திட்டம் ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனம் மற்றும் டயலொக் கம்பனியுடன் ஏற்படுத்தியிருந்த புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பான விபரங்கள் எவை என இந்த நிகழ்ச்சித் திட்டத்தை ஒழுங்குபடுத்திய நிறுவனத்திடம் விசாரித்தல் பொருத்தம் என அறிவித்ததுடன், எமது திணைக்களத்தின் எதுவித தொடர்பும் டயலொக் கம்பனியுடன் காணப்படவில்லை.	வெளித்தரப்பினருடன் தொடர்புபட்டு அலுவல்கள் மேற்கொள்ளும் போது உடன்படிக்கை மேற்கொள்ள வேண்டும்.

(ii) இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஒத்த நிகழ்வாக நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த விளையாட்டுப் போட்டிகளுக்காக ரூபா 16.8 மில்லியன் தொகை விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 3.5 மில்லியன் செலவு மேற்கொள்ளப்பட்டு நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த ஹொக்கி போட்டி நடாத்தப்படாமல் ரூபா 1.53 மில்லியனிற்கான தொகை விளைவற்ற செலவொன்றாக இருந்தது.	இந்த போட்டி நடாத்தப்பட்ட நாட்கள் பூராகவும், மழையாக காணப்பட்டமையால் ஹொக்கி போட்டி நடாத்த முடியவில்லை.	அரச பணம் ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும்.
(iii) இந்த நிகழ்ச்சித் திட்டம் நடாத்துவதற்கு எதுவித பெறுகை செய்முறையும் இன்றி நிகழ்ச்சி முகாமைத்துவ நிறுவனம் ஒன்று தெரிவு செய்யப்பட்டவுடன் அந்த நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சேவைக்கு சமமான சேவையொன்று இலங்கை இளைஞர் சேவை தனியார் கம்பனியினாலும் வழங்கப்பட்டிருத்தல் அந்த நிறுவனத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 19.91 மில்லியனிற்கான செலவுகள் வெளிப்படைத்தன்மையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை அவதானிக்கப்பட்டது.	உங்களால் கண்டறியப்பட்டவாறு திணைக்களத்தினால் நிகழ்ச்சி முகாமைத்துவ நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சேவைக்கு சமமான சேவையொன்று இலங்கை இளைஞர் சேவைக் மன்றத்தின் யூத் சேர்விஸஸ் (பிரைவட்) லிமிடட் கம்பனியினால் Sri Lanka Sports Fiesta 2024 நிகழ்ச்சித் திட்டத்திற்காக பெற்றுக்கொண்டிருந்தால் அது தொடர்பாக இந்த நிகழ்ச்சித் திட்டத்தை ஒழுங்குபடுத்திய அமைச்சிடம் மற்றும் இலங்கை இளைஞர் சேவை மன்றத்துடன் வினவுதல் பொருத்தமானதென கருணையுடன் அறிவிக்கின்றேன். இது தொடர்பாக எமது திணைக்களம் எதுவித பொறுப்பும் ஏற்கவில்லை என அறிவிக்கின்றேன்.	அரசிற்கு நட்டமொன்று ஏற்படாதவாறு செயற்பட வேண்டியதுடன், நட்டத்தினை குறிப்பிட்ட தரப்பினரிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(iv) நிகழ்ச்சித் திட்டம் நடாத்துவதற்காக திட்டமிடப்பட்டிருந்த சில நாட்களின் பின்னர் ஜனாதிபதி தேர்தல் நடைபெறுவதற்கு இருந்தமையால், விளையாட்டு விழாவிற்கு ஒத்த நிகழ்வாக உத்தேச சங்கீதக் கச்சேரி நடாத்தக்கூடாது என தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அறிவித்திருந்த போதிலும், அந்த அறிவுரைகளுக்கு முரணாக உணவு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம், இசைக் கச்சேரி என்பன நடாத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக தேசிய இளைஞர் மன்றம் மற்றும் இளைஞர் சேவை தனியார் கம்பனியினால் ரூபா 16.32 மில்லியன் தொகை	தேர்தல் ஆணையாளரினால் வழங்கப்பட்ட பதில் எது என எமது திணைக்களம் அறிந்திருக்காததுடன், திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற அமைச்சினால் வழங்கப்படுகின்ற அறிவுரைகளின் படி ஆக்கப்படுகின்ற கருமங்களுக்காக அமைச்சினால் வழங்கப்பட்ட பணம் மூன்றாம் தரப்பினரின் வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டது குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்காக கொடுப்பனவு செய்தல் மாத்திரமே.	தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுரைகளின் படி செயற்பட வேண்டும்.

செலவொன்று மேற்கொண்டிருந்தது.

3.5 வைப்பு மீதிகள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	திணைக்களத்தின் 02 வருடங்களுக்கு மிகையான வைப்புக்களின் எண்ணிக்கை ரூபா 67,565,979 தொகையான காணப்பட்டதுடன், அவை அனைத்தும் நிர்மாண வேலைகள் மற்றும் திருத்த வேலைகள் தொடர்பான 136 செயற்திட்டங்கள் தொடர்பான தடுத்து வைத்தல் பணம் என அவதானிக்கப்பட்டதுடன், அவற்றில் 39 செயற்திட்டங்களுக்காக நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், இதுவரை விடுவிக்கப்படாத வைப்புக்களின் பெறுமதி ரூபா 11,302,388 தொகையாக இருந்தது. எனினும், அந்த வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்கள் 571 இன் பிரகாரம் தடுத்து வைத்தல் பணத்தை விடுவிப்பதற்கான தேவைப்பாடு காணப்படுகின்றதா என கவனம் செலுத்தி தேவையானவாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	எதிர் காலத்தில் இந்த தடுத்து வைத்தல் பணம் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.	குறிப்பிட்ட காலப் பகுதியில் தடுத்து வைத்தல் பணம் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	பொது வைப்புக் கணக்கில் காணப்படுகின்ற தடுத்து வைத்தல் பணத்தில் 2 – 5 கால வீச்சிலுள்ள இடைநிறுத்தப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பான ரூபா 1,025,137 இற்கான தடுத்து வைத்தல் பணமும், 5 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் இடைநிறுத்தப்பட்ட 08 செயற்திட்டங்களுக்குரிய ரூபா 3,502,776 இற்கான தடுத்து வைத்தல் பணம் மற்றும் அரச வருமானத்திற்கு செலவு வைக்க வேண்டிய 04 செயற்திட்டங்கள் தொடர்பான ரூபா 362,360 இற்கான தடுத்து வைத்தல் பணத்தை அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	2025 ஆண்டில் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்படும் என அறிவிக்கின்றேன்.	குறிப்பிட்ட காலப் பகுதியில் தடுத்து வைத்தல் பணம் அரச வருமானததிற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(இ)	நிர்மாண வேலை மேற்கொள்ளப்படும் காலம் மிகைத்திருந்த போதிலும், இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்காத 50 செயற்திட்டங்கள் தொடர்பான ரூபா 31,792,332 இற்கான பாதுகாப்பு வைப்புக்களும் பொது வைப்பு மீதியில் அடங்கியுள்ளது.	இதுவரை இந்த செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன், அந்த தடுத்து வைத்தல் பணம் செயற்திட்டத்தின் மீதியான வேலைகள் முடிவடைந்த பின்னர் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.	செயற்திட்டங்கள் குறிப்பிட்ட காலத்தில் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செய்பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பொதுமக்களுக்கு நிறுவனம் தொடர்பான தகவல்கள் வழங்கி பொது மக்களின் பாராட்டு / முறையீடு வெளியிடுவதற்கு தேவையான உத்திகபூர்வ இணையதளம் ஒன்று உருவாக்கியிருக்கவில்லை.	எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன்.	உத்தியோகபூர்வ இணையதளம் ஒன்று உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2024 தேசிய விளையாட்டு நேரசூசியின் படி தேசிய விளையாட்டுச் சங்கங்கள் / சம்மேளனங்களின் தேசிய மற்றும் சர்வதேச போட்டிகள் நடாத்துவதில் முன்னேற்றங்கள் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு வழங்குவதற்கு முடியாமல் இருந்தது.	இது தொடரபான முன்னேற்றம் கணக்காய்விற்கு வழங்குதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.	முன்னேற்றம் கணக்காய்விற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு அரங்கத் தொகுதி நிர்மாணிப்பதற்காக 2024 ஆண்டின் போது ரூபா 100 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது பெறுகை அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காமையால் அந்த ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	2024 புதிய அரசாங்கம் பதவிக்கு வந்தவுடன் தற்போது ஆரம்பிக்காத அனைத்து செயற்திட்டங்களையும் நிறுத்துமாறு அரசாங்கத்தினால் வழங்கியிருந்த அறிவுரையின் படி இந்த பெறுகை நிறுத்தப்பட்டிருந்தது.	விளையாட்டு வளாகத்தை நிர்மாணித்தல் அலுவல்கள் தாமதமின்றி பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.3 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
பிங்கிரிய பிரசேத விளையாட்டு வளாக செய்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற 200 மீற்றர் மற்றும் 400 மீற்றர் ஓடுபாதைகளுக்காக 2024 ஆண்டுகளின் போது முறையே ரூபா 40 மில்லியன் மற்றும் ரூபா 100 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்ட போதிலும், 2024 வருட இறுதி வரை நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவல்லை. 2023 திசெம்பர் 31 திகதி அளவில் மீற்றர் 200 மற்றும் மீற்றர் 400 ஓடுபாதைகள் நிர்மாணிப்பதற்காக முறையே ரூபா 2.69 மில்லியன் மற்றும் ரூபா 7.69 மில்லியன் செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், இந்த நிர்மாண வேலைகள் 2024 திசெம்பர் 31 திகதி அளவிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.	400 மீற்றர் மற்றும் 200 மீற்றர் ஓடுபாதையை நிர்மாணிக்கும் ஒப்பந்த வேலைக்கான பெறுகைத் தீர்மானம் அமைச்சுச் செயலாளரினால் அங்கீகரித்திருக்காமையால் அந்த ஒப்பந்த வேலை வழங்க முடியவில்லை.	நிர்மாண வேலைச் செயற்திட்டங்கள் முறைப் பிரகாரம் முகாமைத்துவப்படுத்துதல், ஒழுங்குறுத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

4.4 செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மாத்தளை மாவட்டத்தில் விளையாட்டு வளாகத்தில் இடைநிறுத்தப்பட்டிருந்த இரண்டு செயற்திட்டங்களுக்காக அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட முற்பணத் தொகையாகிய ரூபா 6.4 மில்லியன் தேசிய இயந்திர உபகரண நிறுவனம் வங்குரோத் அடைந்தமையால் அறவீடு செய்ய முடியாமல் போனது.	இது தொடர்பாக முறையான நடவடிக்கையொன்று எடுத்து அறவீடு செய்வதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன்.	குறிப்பிட்ட தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.5 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 ஆண்டின் போது 200 விளையாட்டு உபகரணத் தொகுதிகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 16.59 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், இந்தக் கொள்வனவின் போது எந்த பெறுகை வழிகாட்டல்களும் கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த 200 உபகரணத் தொகுதிகளும் யாருக்க வழங்கப்பட்டதென கணக்காய்விற்கு தகவல் சமர்பித்திருக்காததுடன். 2024 திசெம்பர் 31 திகதி அளவில் 68 விளையாட்டு உபகரணத் தொகுதிகள் குறிப்பிட்ட தரப்பினருக்கு வினியோகிக்கப்படாமல் களஞ்சியத்தில் விளைவற்று காணப்பட்டதுடன், உபகரணக் கட்டளைகளின் வினியோகம் தொடர்பாக முறையான செய்முறையொன்று தயாரிக்கப்பட்டு அதற்காக முறையான அங்கீகாரம் ஒன்றும் பெற்றிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.	அவ்வாறான 200 தொகுதிகளும் கொள்வனவு செய்தல் கடினமான கருமம் ஒன்றாக காணப்பட்டதுடன், அதேபோல் அதற்காக ஆரம்ப கிரய மதிப்பீடு தயாரித்தல் முடியாது எனவும், மொத்த கிரய மதிப்பீடொன்று தயாரிக்க முடியவில்லை. முறையான செய்முறையொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்துவதற்கு போதியளவு பதவியணியொன்று காணப்படாமையால் கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடு நேரிட்டிருந்தது.	மொத்த கிரய மதிப்பீடொன்று பெறுகை நிறுவனத்தினால் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மீதியான விளையாட்டு உபகரணத் தொகுதிகள் முறைப் பிரகாரம் வினியோப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், முறையான செய்முறை ஒன்று தயாரிக்கப்பட்டு அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	48 ஆவது தேசிய விளையாட்டுப் போட்டி – 2024 இற்கு ஒத்த நிகழ்வாக திணைக்களத்தின் சேவையாற்றுவோருக்காக ரூபா 9,920,160 இற்கான செலவொன்று மேற்கொள்ளப்பட்டு ட சேட்கள், பொடம்கள், தொப்பிகள், காற்சட்டைகள், பைகள், சாரிகள், குடைகள் ஆகியவை கொள்வனவு செய்யும் போது வழங்குனர்கள் தெரிவு செய்வதன: அடிப்படை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்காததுடன், வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் பெறுகை திட்டத்தில் அடங்கியிருந்த இந்த விடயங்கள் அவசர கொள்வனவு என கணித்து செயற்பட்டிருந்தது.	சந்தை விலை தீர்மானிக்கும் அடிப்படையில் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் சந்தை பரிசோதனை மேற்கொண்டு பொருத்தமான வழங்குனர்களின் மூலம் கூறுவிலைகள் மேற்கொண்டு கொள்வனவு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டது.	திணைக்களத்தின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தை அடங்கியுள்ள இந்த போட்டிக்கான பெறுகை அலுவல்கள் பெறுகை வழிகாட்டல்களை கடைபிடித்து மேற்கொள்ள வேண்டும்.

4.6 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 ஏப்ரல் 03 திகதி முதல் ஏப்ரல் 22 திகதி வரை கிரிகிஸ்தானில் நடைபெற்ற Senior Asian Wrestling Tournament, Asian Olympic Games Qualifiers and Training Programme – 2024 பயிற்சி வழங்கல் உட்பட 06 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்குபற்றுவதற்கான அழைப்பிதழில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஈ விஸா பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் வீசா சிக்கல் ஒன்று ஏற்பட்டு குறிப்பிட்ட விமானம் நழுவியிருந்தது. அதன் காரணமாக ஆரம்ப சந்தர்ப்பத்தில் டிக்கட்கள் கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1.49 மில்லியன் தொகைக்கான கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட குறிப்பிட்ட விமான டிக்கட் திரும்பி வரும் போது மாத்திரமே பயன்படுத்தக்கூடியதாக இருந்தது. பின்னர் ஈ வீசா ஊடாக குறிப்பிட்ட போட்டிக்கு செல்வதற்காக மீண்டும் ரூபா 1.19 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இதன் கரணமாக அரசு ரூபா 1.19 மில்லியனிற்காக தொகையொன்றை இழந்திருந்ததுடன், விளையாட்டு வீரர்கள் 5 நாட்கள் தாமதித்து குறிப்பிட்ட போட்டிக்கு மற்றும் நிகழ்ச்சிகளுக்காக பங்குபற்றுவதற்கு நேரிட்டிருந்தது.	கருத்துத் தெரிவித்திருக்கவில்லை.	போட்டிகளில் பங்குபற்றல் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அரச பணம் ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும்.

4.7 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2016 இன் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சங்கங்களின் கட்டளைகள் III பகுதி 7(xii) படி தேசிய விளையாட்டுச் சங்கங்கள் / சம்மேளங்களினால் தொடர்ந்து வரும் ஆண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று மீளாய்வாண்டு முடிவடைவதற்கு 03 மாதங்களுக்கு முன்னர் பணிப்பாளர் நாயகத்திற்க சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், தற்போது பதிவு செய்துள்ள 74 விளையாட்டுச் சங்கங்கள் / சம்மேளங்கள் இடைய 48 சங்கங்கள் / சம்மேளங்கள் மாத்திரம் செயல் நடவடிக்கைத் திட்டங்கள் சமர்ப்பித்திருந்தது. 52 விளையாட்டுச் சங்கங்கள் / சம்மேளங்கள் மாத்திரம் 2024 ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்ததுடன், அவற்றில் செயற்படாத 08 சங்கங்கள் / சம்மேளங்கள் காணப்படுகின்றதென அவதானிக்கப்பட்டது.	மீதியான சங்கங்கள் மற்றும் சம்மேளங்களில் இருந்து இந்த அறிக்கைகள் தருவித்துக்கொள்வதற்காக பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதென அறிவிக்கப்பட்டுள்ளது.	விளையாட்டுச் சங்கங்கள் / சம்மேளங்களிலிருந்து செயல் நடவடிக்கைத் திட்டங்கள் பெற்றுக்கொள்வதற்கும் 2024 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக குறிப்பிட்ட காலத்தினுள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(ஆ)	விளையாட்டுச் சங்கங்களின் நிறைவேற்றுக் குழுக்களின் பதவிக் காலத்திற்கு முன்னர் பதவியை இடைநிறுத்தும் போது அப்போது காணப்பட்ட சொத்துக்கள் உரிய முறையில் விளையாட்டுப் பணிப்பாளர் நாயகத்தின் பொறுப்பில் எடுத்த பின்னர் இடைக்கால கட்டுப்பாட்டுக் குழுவின் பொறுப்பில் எடுத்ததன் மூலம் பாரிய நிதி மோசடியொன்று ஏற்பட்டிருந்ததுடன், இடைநிறுத்தப்பட்ட பின்னரும் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்க முடியாத நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையை தவிர்ந்துகொள்வதற்காக தேசிய	கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பரிந்துரைகளை ஏற்றுக்கொள்வதுடன், எதிர் காலத்தில் இதனை சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பேன்.	இந்த நிலைமையை தவிர்ந்துகொள்வதற்காக தேசிய விளையாட்டுச் சங்கங்களை அறிவுறுத்த வேண்டும்.

விளையாட்டுச் சங்கங்களை அறிவுறுத்தியிருக்கவில்லை.

5. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்டப்ட பதவியணி 395 ஆக காணப்பட்டதுடன், சிரேஷ்ட மட்டத்தில் 08 வெற்றிடங்களும், மூன்றாம் மட்டத்தில் 16 வெற்றிடங்களும், இரண்டாம் மட்டத்தில் 78 வெற்றிடங்களும், ஆரம்ப மட்டத்தில் 22 வெற்றிடங்களுமாக மொத்தம் 124 வெற்றிடங்கள் காணப்பட்டன. அதன்படி, ஊழியர் வெற்றிட எண்ணிக்கை 2023 ஆண்டிற்கு நேரொப்ப 2024 ஆண்டின் போது 11 இனால் அதிகரித்திருந்தது.	மொத்த ஊழியர் வெற்றிட எண்ணிக்கை 124 ஆக காணப்பட்டதுடன், இதனை நிரப்புவதற்காக அமைச்சு மற்றும் திணைக்களத்திற்கு அறிவுறுத்திய போதிலும், இதுவரை நிரப்பப்பட்டிருக்கவில்லை.	தேவைப்பாட்டினை கவனம் செலுத்தி பதவியணி வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பதற்காக தாமதம் இன்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்.